# விடியல்

THE DAWN மாத இதழ்

பொழுது - 91
நவம்பர் 2016




## குழந்தைகள் தினம்




SUN Printer தி.கோடு. 97500 20222

KSR COLLEGE OF ARTS AND SCIENCE INDIA
Knowledge is Power

விடியல் மாத இதழ் (தனிச்சுற்றுக்கு மட்டும்)
வெளியீடு: தமிழ்த்துறை
கே.எஸ். ரங்கசாமி கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)
திருச்செங்கோடு - 637 215, தமிழ்நாடு, இந்தியா.
*fb* : facebook.com/ksrcasthamizh.vidiyal
*Blog : ksrcasthamizh.blogspot.in*
*Email : vidiyalmagazhine@gmail.com*
*Website : ksrcas.edu*

விடியல் November 2016

# விடியல்

## The Dawn

**இதழ்– 91, நவம்பர் 2016**



கௌரவ ஆசிரியர்

முனைவர் வே. இராதாகிருஷ்ணன்

கல்லூரி முதல்வர்

ஆசிரியர்

முனைவர் சி. ஆர். சுரேஸ்

துறைத்தலைவர்

இணையாசிரியர்

முனைவர் ம.லோகேஸ்வரன்

ஆசிரியர் குழு

திரு. வீ. முருகானந்தம்

முனைவர் த. கண்ணன்

திருமதி. கு. சாந்தி

திரு. ப. ராஜேஷ்

முனைவர் து. சரஸ்வதி

முனைவர் பா. ராஜேஷ்

முனைவர் கோ. ரவிச்சந்திரன்

முனைவர் ந. சங்கீதா

திரு. செ. தங்கராஜ்

திரு. மு. சதீஸ்குமார்

முனைவர் கு. முப்பிடாதி

முனைவர் ப. பிரதிபா

திரு. சத்தியராஜ்

திரு.சிலம்பரசன்




### தலையங்கம்

## பழைய ரூபாய்களும் புதிய திட்டங்களும்

நவம்ர் 8 ஆம் தேதி மத்திய அரசிடமிருந்து இந்திய மக்களுக்கு இப்படி ஒரு அறிவிப்பு வரும் என்பதை யாரும் நினைத்திருக்க மாட்டார்கள். ஆம் நவம்பர் 8 ஆம் தேதி 12.00 மணியிலிருந்து 500,1000 ரூபாய் நோட்டுகள் செல்லாது என்ற அறிவிப்புதான் அது. இந்த அறிவிப்பால் சாமானியனிலிருந்து பணக்காரன் வரை இரண்டு மூன்று நாட்கள் வழி பிதுங்கி நின்றனர். திட்டத்தின் சாரத்தை முழுமையாக புரிந்து கொள்ளாமல் பலராலும் பல விதமான புரளிகள் கிளப்பப் பட்டன. அன்றைய தினம் பிரதமர் மோடியின் பேச்சு வீரியம் மிகுந்ததாகவே இருந்தது. நாட்டின்


© K.S. Rangasamy College of Arts and Science (Autonomous)



வெளியீடு:

**தமிழ்த்துறை,**

கே.எஸ்.ரங்கசாமி கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)

திருச்செங்கோடு—637215. தமிழ்நாடு, இந்தியா.

Fb: facebook.com/ksrcasthamizh.vidiyal

Blog: ksrcasthamizh.blogspot.in E-mail: vidiyalmagazhine@gmail.com

Website: ksrcas.edu

KSR COLLEGE OF ARTS AND SCIENCE INDIA Knowledge is Power



All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system or transmitted in any form or by any means electronic, mechanical, photocopying, recording or otherwise without the prior written permission of the publisher

மீதான அக்கறை உணர்வு மேலிட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது. கறுப்புப் பணத்திற்கு எதிராகவும் கள்ள நோட்டிற்கு எதிராகவும் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்றும் இதனால் மக்கள் அதிக சிரமத்திற்கு உள்ளாவார்கள் இருந்தாலும் எனக்காகவும் நாட்டிற்காகவும் பொறுத்துக் கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டடார். இது ஒரு கசப்பு மருந்து. தேசத்தின் வளர்ச்சிக்காக கொடுக்கப்பட்டுள்ள கசப்பு மருந்து என்று மிக உணர்வுப்பூர்வமாக ஊடகங்களில் பேட்டி கொடுத்திருந்ததை நாம் மறக்கவியலாது.



50 நாட்கள் எனக்கு அவகாசம் கொடுங்கள் தேசத்தை மாற்றிக் காட்டுகிறேன் என்று அறைகூவல் விடுத்திருந்தார். இந்திய தேசத்தில் இது ஒரு முக்கியமான நடவடிக்கை என்றே கருத இடமுண்டு. எத்தனையோ நாடுகள் கறுப்புப் பணத்திற்கு எதிரான நடவடிக்கைகளை எடுத்துள்ளன அவையத்தனையும் தோல்வியில் முடிந்துள்ளன என்பது வரலாறு. இதற்கு முன்னதாக இந்தியாவே இம்முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது. அம்முயற்சி தோல்வியைச் சந்தித்திருக்கிறது. இவ்வளவையும் கடந்து பிரதமர் இவ்வறிவிப்பைச் செய்திருக்கிறார் என்றால் அதன் சாதக பாதகங்களை நன்கு அலசி ஆராய்ந்த பின்னரே நிகழ்ந்தேறியிருக்கிறது என்பதை முதலில் நாம் புரிந்தாக வேண்டும்.



டிசம்பர் 30 வரை பழைய 500,1000 ரூபாய் நோட்டுகளை மாற்றிக் கொள்ளலாம். அதன் பிறகு செல்லாது



ஒரு நாளைக்கு ஏடிஎம் இயந்திரத்தில் 2000 ரூபாய் மட்டுமே எடுத்தல்



ஒரு வாரத்திற்கு 24000 ரூபாய் மட்டுமே வங்கியில் எடுத்தல்

ஒரு நபர் 250000 ரூபாய் மட்டுமே வைத்துக் கொள்ள அனுமதி. அதற்கு மேல் வரி செலுத்துதல். 

அதிகபட்சமாக ஒரு நாளைக்கு49900 ரூபாய் வைப்பில் கொள்ளுதல்

இதுபோன்ற ஏராளமான கெடுபிடிகளை மத்திய அரசும் ரிசர்வ் வங்கியும் மாறிமாறி புதிய புதிய அறிவிப்புகளை வெளியிட்டுக் கொண்டே இருந்தன. இது மக்களுக்கு எரிச்சலையூட்டக் கூடியதாக இருந்தாலும் ஒரு புதிய திட்டம் வெற்றியடைய வேண்டுமானால் முற்றும் முழுதாக முன்னதாகவே அறிவித்து முடிவை எதிர்நோக்கி இருக்க முடியாது. திட்டம் அமலுக்கு வரும்பொழுது ஏராளமாக நன்மை தீமைகள் வெளிப்படும். அதைச் சரிசெய்வதற்குத் தான் புதிய புதிய அறிவிப்புகள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. 

கறுப்புப் பண ஒழிப்பு, கள்ளநோட்டுகள் ஒழிப்பு என்கிற மிகப்பெரிய சமூகப் பிரச்சினையை எத்தனையோ ஆண்டுகளாக எத்தனையோ அரசியல்வாதிகள் கையிலெடுத்துள்ளனர். ஆனால் வந்த வேகத்தில் அவையெல்லாம் காணாமல் போயிருக்கின்றன. தற்பொழுது மோடியின் இச்செயல்பாடு தனித்துவமிக்கதாவே அமைந்திருக்கிறது. இந்தத் திட்டம் வெற்றியா தோல்வியா என்பது ஒருபக்கம் இருந்தாலும் மிகத் துணிச்சலாக இப்பிரச்சினையைக் கையிலெடுத்ததற்காக மோடி அவர்களுக்கு நாம் கை குலுக்கலாம். இதற்கு மாறாக மக்களின் அவதிகளை எண்ணுகையில் உண்மையில் மிகவும் வருத்தமளிக்கக் கூடியதாகவே இருக்கிறது. பொறுத்துவிட்டோம் என்னதான் நடக்கப்போகிறது என்பதையும் பார்த்துவிடலாம். மோடியின் பேச்சுரை போல நாட்டின் நன்மைக்காக ஒரு இந்தியக் குடிமகனாக இந்த அர்ப்பணிப்பை நாம் செய்வதில் தவறில்லை என்று தான் படுகிறது... 

# உள்ளுறை

இந்தியப் பிரதமர்கள் குறிப்புகள்------5-7

கவிதைகள்--------------------7-8

பழமொழி----------------------9-14

விடுகதை,துணுக்குகள்------------14-15

நுண்ணுயிரியல் துறை படைப்புகள்--16-22

மனக்காயம்--------------------22-27

சிறப்புக் கட்டுரை---------------27-32

## பிரதமர் – கால வரலாறு

இந்திய அரசின் தலைவரான பிரதமரே அரசியல் சாசனம் வழங்கிய அதிகாரங்களைக் கையாண்டு நாட்டை வழிநடத்தும் தகுதி படைத்தவர். இச்சிறப்புமிகு பதவியில் இதுவரை இருந்துள்ள இந்தியப் பிரதமர்களின் பட்டியலை மனதில் வைத்துக் கொள்ளுவது பயன்தரும்.

ஜவஹர்லால் நேரு – *1947 – 1964*

லால்பகதூர் சாஸ்திரி – *1964 – 1966*




இந்திரா காந்தி – *1966 – 1977*

மொரார்ஜி தேசாய் – *1977 – 1979*

சரண் சிங் – *1979 – 1980*

இந்திரா காந்தி – *1980 – 1984*

ராஜீவ் காந்தி – *1984 – 1989*

விஸ்வநாத் பிரதாப் சிங் – *1989 – 1990*

சந்திர சேகர் – *1990 – 1991*

பி.வி.நரசிம்ம ராவ் – *1991 – 1996*

அடல் பிகாரி வாஜ்பாய் – *1996 – 1996*

தேவ கவுடா – *1996 – 1997*

ஐ.கே.குஜ்ரால் – *1997 – 1998*

அடல் பிகாரி வாஜ்பாய் – *1998 – 2004*

மன்மோகன் சிங் – *2004 – 2014*

நரேந்திர மோடி – *2014* …..

இடைக்கால பிரதமர் ----- குல்சாரிலால் நந்தா – *1964,1966*

## பிரதமர்களும் தினங்களும்




தேசிய குழந்தைகள் தினம்(நவ.14) – ஜவஹர்லால் நேரு பிறப்பு

தேசிய விவசாயிகள் தினம்(டிசம்பர் 23) – சரண் சிங் பிறப்பு

தேசிய ஒருமைப்பாட்டு தினம்(நவம்பர்19) – இந்திரா காந்தி பிறப்பு

தேசிய புனர் அர்ப்பண தினம்(அக்.31)– இந்திராகாந்தி மறைவு

தேசிய சத்பவன தினம்(ஆக.20) – ராஜீவ் காந்தி பிறப்பு

தேசிய தீவிரவாத எதிர்ப்பு தினம்(மே 31) – ராஜீவ்காந்தி மறைவு

**சிறப்புகள்**

இற்தியாவின் முதல் பிரதமர் – ஜவஹர்லால் நேரு

மிக அதிக காலம் பிரதமராக பதவி வகித்தவர் – நேரு

மிகக் குறைந்த காலம் பிரதமராகப் பதவி வகித்தவர் – சரண்சிங் (ஐந்து மாதம் பதினேழு நாட்கள்)

இந்தியாவின் முதல் பெண் பிரதமர் – இந்திரா காந்தி

பிரதமர் பதவியேற்ற வயதான நபர் – மொரார்ஜி தேசாய் (81 ஆம் வயதில்)

மிகக் குறைந்த வயதில் பிரதமராகப் பதவியேற்றவர் – ராஜீவ்காந்தி (1984, 40 ஆம் வயதில்)

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முதன்முதலில் சந்தித்த பிரதமர் – ஜவஹர்லால் நேரு

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மூலம் பதவி இழந்த பிரதமர் – வி.பி.சிங்

பதவியை ராஜினாமா செய்த முதல் பிரதமர் – மொரார்ஜி தேசாய்

பாராளுமன்ற உறுப்பினராக இல்லாத போதும் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் – எச்.டி.தேவ கவுடா

பதவியில் இருக்கும் போது காலமான பிரதமர் – நேரு

அயல்நாட்டில் காலமான பிரதமர் – லால் பகதூர் சாஸ்திரி

பதவியில் இருக்கும் போது கொல்லப்பட்ட பிரதமர் – இந்திரா காந்தி

*தொகுப்பு – இரா.ஆ.சரண்குமார்*

*முதலாமாண்டு கணிதவியல் ஈ பிரிவு*

## இயற்கையின் புன்னகை

பூமியன்னையின் மடியில் தவழ்ந்த
மழலை இயற்கை..
ஆனால் மனிதனுக்கு அன்னை
இயற்கை தானே..
ஒவ்வொரு தினத்தில்
ஜனிக்கின்ற உயிர்களும்
வைகறை வேளைகளில்
ஆதவனை எழுப்பிவிடும்
கொண்டைச் சேவல்களும்



துளிர்விடும் இலைகளின் நுனியில்
ததும்பி நிற்கும் பனித்துளிகளும்
வெள்ளித்திரைப் போர்த்திய பனிமலைகளும்

கட்டுக்கடங்காது உயரந்து நிற்கும்
காட்டுமரங்களும்
சில்லென்று வீசும்
மாலையிளந் தென்றலும்
தென்றல் பாடும் கீதத்திற்குத்
தலையசைக்கும் தென்னங் கீற்றுகளும்
தாமரைத் தடாகங்களில்
சுழன்று பறக்கும் தும்பிகளும்
பால்நிலா எட்டிப் பார்க்கும்
ஜாமங்களில் வண்டினங்களைக் கவரும்
அல்லி மலர்களும்..
மேகத்துகலிகையில் நீராடும்
பூமாதேவியும் சிலிர்க்கிறாள்..
இயற்கைத்தாய் புன்னகைக்கிறாள்..
பேணிக்காப்போம்
இயற்கையன்னையின் புன்னகையை..!

பா.தேவி
தமிழிலக்கியம் இரண்டாமாண்டு

## அன்புள்ள அப்பா

என்னைப் பெற்றது தாய் என்றாலும்
என் வாழ்க்கையின் முதல் தோழன்
தன்னலமில்லாதா சுத்தமான அன்பு

தனது தோல்விகளைத் தன்னுள் கொண்டு
எனது தோல்விக்கு ஆறுதல் கூறும் அன்பர்
பிள்ளை கேட்டுவிட்டாளே என்று
தலையை அடமானம் வைத்து வாங்கித்தருபவர்
மகனை அம்மாவும்
மகளை அப்பாவும் கொண்டாடுவது
இயல்பு என்கிறார்கள்
ஆனால் நாங்கள் இரண்டு பேரும்
அவருக்கு இரு கண்கள்..
ஆம், கர்ப்பம் தரிக்காமல்
ஆண்டாண்டு காலமாய்
காத்து வரும் ஆண் தாய் தான்
என் அப்பா..!



*சே.நந்தினி தேவி*

*தமிழிலக்கியம் மூன்றாமாண்டு*

## பழமொழி கடந்த இதழின் தொடர்ச்சி

401)ஈரைப் பேனாக்கி பேனைப் பெருமாளாக்கியது போல்

402)பூவோடு சேர்ந்த நாறும் மணக்கும்

403)உனக்கும் பெப்பே உன் அப்பனுக்கும் பெப்பே

404)அறிவு பணிவைத்தரும் அறியாமை ஆணவத்தைத் தரும்

405)எல்லாத் துன்பங்களுக்கும் சோம்பலே அடிப்படைக் காரணமாகும்

406)நிதானம் பிரதானம்

407)ஒன்றின் மறைவு மற்றதன் துவக்கும்

408)அற்ற குளத்து அறுநீர்ப் பறவை போல

409)மருந்துக்கு மீறினால் கத்தியில் முடியும்

410)தொட்டில் பழக்கம் சுடுகாடு வரைக்கும்

411)ஆள் பாதி ஆடை பாதி

412)கூழைக்கும்பிடு போடுபவன் குழிபறிப்பான்

413)திறந்த கதவு துறவியையும் திருடனாக்கும்

414)புன்னகையே வியாபாரத்தின் மூலதனம்



415)குப்பையில் இருந்தாலும் குண்டுமணி குண்டுமணிதான்

416)மூழ்குபவனுக்கு துரும்பும் துடுப்பாகும்

417)அநீதிக்கு ஆயிரம் தூண்கள்

418)பிறவிக் குருடனுக்குப் பணம் நோட்டம் தெரியுமா?

419)ஒரு பொய்யை மறைக்க ஒன்பது பொய் சொல்ல வேண்டுமா?

420)கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை

421)மனமிருந்தால் மார்க்கம் உண்டு

422)அக்கம் பக்கம் பார்த்துப் பேசு

423)கோழி மிதித்துக் குஞ்சு சாகாது

424)சென்மப் புத்தியைச் செருப்பால் அடித்தாலும் போகுமா?

425)குருடனுக்குக் குருடன் வழிகாட்ட முடியுமா?

426)அரசன் அன்று கொல்வான் தெய்வம் நின்று கொல்லும்

427)ஐயர் வரும் வரை அம்மாவாசை காத்திருக்காது

428)காமாலை கண்டவனுக்குக் கண்டதெல்லாம் மஞ்சள்

429)திருடிய கனி தித்திக்கும்

430)முள்ளை முள்ளால் எடு, சொல்லை அறிவால் எடு

431)பழைமை விலை மதிப்புமிக்கது

432)கரையை அடையும் முன் துடுப்பை எறியலாமா?

433)செய் அல்லது செத்து மடி

434)ஆணவத்தால் அழியாதே

435)இழந்த நேரம் திரும்ப வராது

436)மண்ணுயிரைத் தன்னுயிர் போல நினை

437)எறும்பு ஊரக் கல்லும் தேயும்



438)உண்டால் தீரும் பசி கண்டால் தீருமா?

439)வானம் சுருங்கின் தானம் சுருங்கும்

440)மடியே விதியின் திறவுகோல்

441)இலக்கணம் பரம ஔடதம்

442)சங்கு சுட்டாலும் வெண்மை தரும்

443)பசுவை விற்றால் கன்றுக்கு அடக்கமா?

444)தன்னைக் கட்ட தானே கயிறு கொடுத்தது போல

445)மனதின் இருளோ அறியாமை

446)தீய களைகளே விரைவில் விளையும்

447)ஈயார் தேட்டைத் தீயார் கொள்வார்

448)தீமையால் வந்தது தீமையால் போகும்

449)பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சாது

450)ஒரு காதில் வாங்கி மறு காதில் விட்டாற் போல

451)மூத்தோர் சொல் அமிர்தம்

452)யார் ஆற்றுவார் காலம் ஆற்றும்



453)குயவனுக்குப் பல நாள் வேலை. உடைக்கிறவனுக்கு அரைநாழிகை வேலை

454)தன் முதுகின் அழுக்குத் தனக்குத் தெரியாது

455)வழுக்கி விழாத குதிரை வளமான குதிரை

456)துளசிக்கு வாசமும் முள்ளுக்குக் கூர்மையும் முளைக்கிற போதே தெரியும்

457)இரும்பைப் பிடித்தக் கையும் சிரங்கு பிடித்தக் கையும் சும்மா இருக்காது

458)கோடாலிக் காம்பு குலத்தைக் கெடுக்கும்

459)அன்னம் இட்ட வீட்டில் கன்னம் வைக்கலாமா?

460)சந்தடி சாக்கிலே கந்தப்பொடி கால் பணம்

461)தலையணையைத் திருப்பிப் போட்டால் தலைவலி தீருமா?

462)மீனின் முள்ளும் சில நேரம் கொக்கைக் கொல்லும்

463)தொழுத கையுள்ளும் படையொடுங்கும்

464)ஊமை கனவு கண்டாற் போல

465)மந்திரம் கால் மதி முக்கால்

466)காஷாயம் அணிந்தவன் எல்லாம் சன்னியாசி அல்ல

467)மடையனுக்கு மறுமொழி இல்லை

468)நாயைக் கொஞ்சினால் முகவாயை நக்கும்

469)உலை கொதிக்க வேணும் பொருளீட்டு

470)அதிகம் வரும் வரை கொஞ்சமெனும் வைத்திரு

471)கண்டால் காமாட்சி காணாவிட்டால் காமாட்டி

472)ஆகுங்காலம் ஆகும் போகுங்காலம் போகும்

473)தாமதித்த நீதி மறுக்கப்பட்ட நீதி

474)அன்பு ஒரு போதும் வீணாவதில்லை

475)தட்டிய கதவே திறக்கும்

476)அறிவு ஒரு சுமையல்ல

477)பொய் அதிவேகத்தில் பரவும்

478)வாழ்க்கை ஒரு புனித யாத்திரை

479)மூக்கு உள்ளவரை சளி இருக்கும்

480)மடியில் கனமில்லை என்றால் வழியில் பயமில்லை

481)நகமும் சதையம் போல

482)கறக்கிறது நாழி உதைக்கிறது பல்லு போக

483)தானும் திண்ணான் தரையிலும் போடான்

484)வாழ்க்கை குறுகியதாக இருந்தாலும் இனிது

485)புத்தி கெட்ட ராசாவுக்கு மதி கெட்ட மந்திரி

486)சட்டி பாலுக்கு ஒரு துளி மோர் பிரை

487)அன்பை அடக்கியவர் உண்டோ?

488)அதிர்ஷ்டம் இருந்தால் அரசம்ம பண்ணலாம்

489)ஆழமறியாமல் காலை விடாதே

490)பேதைமை என்பது மாதர்க்கு அழகு

491)அலை மோதும் போதே தலை முழுகு



492)பருவத்தே கண்டு விதை செய்

493)முட்டையை உடைக்க சுத்தியல் வேண்டுமா?

494)கன்னி இருக்க காளை மணம் ஏறலாமா?

495)தன் குற்றம் தனக்குத் தெரியாது

496)கணக்குப் பார்த்தால் பிணக்கு வரும்

497)கடுஞ்சினம் கடும் பகை

498)பகலில் தோன்றிய சந்திரன் போல

499)கெடுவது செய்தால் படுவது கருமம்

500)அடி நொச்சி நுனி ஆமணக்கா

------முற்றும்-----

A.மேனகா

வணிகக் கணினிப் பயன்பாட்டியல் இ பிரிவு

# பொது அறிவுத் துணுக்குகள்

1)அட்லாண்டிக் பகுதிகளில் ஆண்டிற்கு ஒருமுறைதான் சூரியன் உதயமாகிறது.




2)மகாத்மா காந்தி இந்தியாவில் மட்டுமல்ல தென்னாப்பிரிக்காவிலும் சிறைத்தண்டனை அனுபவித்துள்ளார்.

3)முதன்முதலில் கேள்விக்குறியைப் பயன்படுத்திய மொழி இலத்தின்

4)கைரைகையை வைத்துக் குற்றவாளியைக் கண்டுபிடிக்கும் முறையைக் கண்டறிந்தவர் – எட்வர்டு ஹென்றி

5)மீன் தன் இறுதி வாழ்நாள் வரை வளர்ச்சியடைந்து கொண்டே இருக்கும்.

6)மருந்துவகை உற்பத்திகளைப் பெருக்குவதே இளஞ்சிவப்புப் புரட்சி

7)நீலப்புரட்சி என்பது மீன் உற்பத்தியைப் பெருக்குவதாகும்

8)வெண்மைப்புரட்சி என்பது பால் உற்பத்தியைப் பெருக்குவது

9)மஞ்சள் புரட்சி என்பது எண்ணெய் வித்துக்களின் உற்பத்தியைப் பெருக்குவது

# விடுகதை

1)சின்னத்தம்பிக்குத் தொட்டியே வினை அது என்ன?

தீக்குச்சி

2)தலை மட்டும் கொண்ட சிறகில்லாத பறவை. அது தேசமெல்லாம் சுத்தும் அது என்ன?

தபால்தலை

3)உலகமெங்கும் படுக்கை விரித்தும் உறங்காமல் அலைகிறான் அவன் யார்?

கடல் அலை



4)காற்று வீசும் குட்டி மரம் அது என்ன?

சாமரம்

5)கட்டிய சேலையை அவிழ்க்க நினைத்தால் கண்ணீரும் கம்பலையும் தான் அது என்ன?

வெங்காயம்

6)எப்போதும் காதையே கடித்துக் கொண்டிருப்பவன் யார் அவன்?

அலைபேசி

7)குடிக்க உதவாது. குளத்தில் தங்காது. கைகளால் தொடாத நீர். கண்களுக்கு மட்டுமே விருந்தாகும் அது என்ன?

கானல் நீர்

8)குதிரை ஓட ஓட அதன்வால் குறைந்து கொண்டே போகும் அது என்ன?

ஊசிநூல்

9)கருப்பாய் இருந்தாலும் சுவைப்பாய் இருப்பேன் நான் யார்?

நாவல் பழம்

*கோ.பாலகுமார்*

*நுண்ணுயிரியல் முதலாமாண்டு*

## கடல்



உப்பொடு பவளம் முத்தினையும்
உவந்தே நீயும் தருகின்றாய்
கப்பலேறி வெளிநாடு
காண நீயும் வழியானாய்!
பரந்து விரிந்து இருமடங்காய்ப்
பாரினில் நீயே இருக்கின்றாய்
இருந்தும் சீற்றம் கொண்ட நீ
எம் நிலம் ஏனோ பார்க்கின்றாய்..?

## மழை



மேள தாளத்தோடு வானில்
இருந்து வருகுது இடி
மின்னல் காற்று சுழன்று வீசி
மழையும் பொழியுது
ஏரி குளங்கள் நீர்நிரம்பி
இன்பம் ததும்புது எங்கும்
இஞ்சி மஞ்சள் நெல்லும் கரும்பும்
கொஞ்சி ஆடுது..

## குழந்தை

சின்னச்சின்னக் குழந்தையம்மா
சித்திரம் போல் சிரிக்குதம்மா
மண்ணில்வந்த சொர்க்கமம்மா
மடிதவழும் அமுதமம்மா

தென்றலொன்று ஆடிவந்து
தேன்மழலைச் சொல்பயின்று
என்றனிரு செவிகளிலே
இன்னிசையைத் தேக்குதம்மா..



## நட்பு

நட்பினைப் போலொரு அற்புத உறவை
நானிலம் முழுதும் தேடினும் வாய்க்குமோ?
ஔவையோ டதியமான் கொண்டநல் நட்பை
அருங்கனி நெல்லி எடுத்துரைக் காதோ
பாரியும் கபிலனும் சீரிய நண்பராய்
வாழ்ந்த நிலையை இலக்கியம் இயம்பும்
அன்னையாய் இருந்து அன்பினைப் பொழியும்
அத்தனையாய் இருந்து நல்வழி காட்டும்
அத்தனை உறவும் ஓர்வடி வெடுத்தே
அன்பொடு இன்பம் அளித்திடும் நட்பே..!

**முயற்சி**




தோல்விகளைப் படிகளாக்கித்
தொடர்ந்து செல்லுங்கள் முகம்
சோர்ந்து சோகம் சூழ்ந்திடாமல்
மேலும் முயலுங்கள்!
வீழ்ந்துவிட்டால் எழுவதற்குக்
கால்கள் இல்லையோ! நாளை
வெற்றிகாண நமது நெஞ்சில்
உரமும் இல்லையோ
அயர்ச்சி இன்றி முயற்சி செய்தால்

ஆகும் வெற்றியே! தோல்வி
அடைந்திடாமல் வெற்றி மட்டும்
கண்டோர் இல்லையே!

*தொகுப்பு எ.ரகுநாத்*
*நுண்ணுயிரியல் முதலாமாண்டு*

**துணிவுகொள்**



இருட்டைக் கண்டு பயந்து விடாதே
விடியலைக் கண்டு முடங்கி விடாதே
காலத்தைக் கண்டு ஓடி விடாதே
தெய்வத்தைக் கண்டு அஞ்சி விடாதே
தோல்வியைக் கண்டு தூங்கி விடாதே
வெற்றியைக் கண்டு மகிழ்ந்து விடாதே
எதிர்காலத்தைக் கண்டு ஏமாந்து விடாதே
தோல்வியை வென்று வெற்றி பெறு
பயத்தை வென்று துணிவு பெறு
காலம் உன் கையில்
எதிர்காலம் உன் காலடியில்

ஹரிஹரன்
நுண்ணுயிரியல் முதலாமாண்டு

## சாதிக்கலாம் வாங்க


*எந்த விஷயத்தைச் செய்வது உங்களுக்கு ரொம்பவும் எளிதாக இருக்கிறதோ அதைவிட கடினமான வேலையைச் செய்ய நீங்கள் தகுதியானவராக இருக்கிறீர்கள் என்று அர்த்தம்*

H.G.Wells என்று ஒரு அறிஞர்,

போட்டியில் இரண்டாவதாக வருபவன் இதைச் செய்யலாம் ஆனால் கடினம் என்று சொல்பவன்

முதலாவதாக வருபவன் இது கடினம் தான் ஆனால் செய்யலாம் என்று சொல்பவன்

கேட்பதற்குக் கொஞ்சம் எளிமையாக இருக்கலாம். ஆனால் விஷயம் பெரிது. ஆழமானது. முதலில் வருபவன், இரண்டாவதாக வருபவன் இருவரின் பார்வையும் எதன் மீது இருக்கிறது என்பதுதான் முக்கியம்



முதலில் வருபவனுக்கு அந்த வேலையைச் செய்ய வேண்டும் என்பதன் மீது கவனம்..

இரண்டாவதாக வருபவனுக்கு அந்த வேலையைச் செய்வது கடினம் என்பதன் மீது கவனம்

நீங்கள் எதன் மீது கவனம் செலுத்துகிறீர்கயோ அதன்படியே உங்களின் வெளிப்பாடுகள் இருக்கின்றன.

ஒரு வேலையைச் செய்கிற போது அதில் இருக்கிற சாதக, பாதகங்களை, கஷ்ட நஷ்டங்களைக் கவனித்து அதில் கால்வைக்க வேண்டும் என்பது புத்திசாலித்தனம். ஆனால் இந்த புத்திசாலித்தனத்தைப் பல நேரங்களில் அந்த வேலை கஷ்டம் என்று சொல்லி ஒதுக்கி வைப்பதற்குப் பயன்படுத்தி விடுகிறோம்

ஆங்கிலத்தில் Comfort Zone என்று ஒரு வார்த்தை சொல்வார்கள். வசதியான சூழல் இதற்குப் பழகிப் போகிற மனசும் உடம்பும் கண்முன்னே தெரிகிற வாய்ப்புகளைக் கூட கஷ்டம் அதனால் தேவையில்லை என்று சொல்லி ஒதுக்கி வைத்து விடுகிறது. நமக்குள் இருக்கிற திறமைக்கும் ஞானத்துக்கும் என்ன பலன் இருக்கிறது என்பதைப் பரீட்சித்துப் பார்க்காமலேயே முடங்கிப்போக வைக்கிறது.

இதை ஏன் இழுத்துப் போட்டுக்கிட்டு கஷ்டப்படுவானேன் என்கிற எண்ணம். செய்வதற்குச் சாத்தியமான பல சாதனைகளையும் தவிர்த்து விடுகிறது. ஒருவேளை இந்த Comfort Zone ல் இல்லாமல் இருந்திருந்தால் அதைக் கட்டாயம் கையில் எடுத்திருப்போம்.

இருப்பதை விட்டு பறக்க ஆசைப்படக் கூடாது என்பது பழமொழி ஆனால் நீங்கள் உங்கள் தகுதிக்கும் அறிவுக்கும் திறனுக்கும் உரிய தகுதியான இடத்தில்தான் இருக்கிறீர்களா என்பதுதான் முக்கியம்.

உங்களுக்கு இருப்பது போதும் என்ற எண்ணம் இருக்கலாம் ஆனால் ஆழ்ந்து யோசித்துப் பாருங்கள். இருப்பது போதும் என்கிற எண்ணத்திற்குள் ஒளிந்து கிடப்பது ஏன் கஷ்டப்பட வேண்டும்? என்கிற எண்ணம் தானே?

இதை நான் சொல்லவேண்டும் என்று தோன்றியதற்குக் காரணமும் இருக்கிறது. இன்றைக்கு எதிலுமே ஸ்திரத்தன்மை இல்லாத நிலையில் பொருளாதாரமும் சமூக சூழலும் நம்மை நெருக்கிக் கொண்டு இருக்கின்றன. எனக்குத் தலைமைப் பதவியில் இருக்கும் ஒருவர் எப்போது நீ Comfort Zone ல் இருப்பதாக உணர்கிறாயோ அப்போது அதைவிட்டு விட்டு வெளியேறு என்று அடிக்கடி சொல்லுவார்.

அப்படியென்றால் இருக்கிற வேலையை விட்டுவிட்டுப் போய் விட வேண்டும் என்று அர்த்தமில்லை. எந்த விஷயத்தைச் செய்வது உங்களுக்கு ரொம்பவும் எளிதாக இருக்கிறதோ அதைவிட கடினமான வேலையைச் செய்ய நீங்கள் தகுதியானவராக இருக்கிறீர்கள் என்று அர்த்தம்.

உங்களால் மணிக்கு 100 கி.மீ. வேகத்தில் ஓட முடியும் என்றால் ஏன் 50 கி.மீ. வேகத்தில் நீங்கள் ஓட வேண்டும்? உங்கள் திறமைக்குரிய வேலை உங்களுக்கு இல்லை என்பதற்காக அலுத்துக் கொள்ளவும் எரிச்சல் அடையவும் உங்களுக்கு உரிமை இருக்கிறது என்றால் உங்கள் அறிவும் திறமையும் அதன் தகதிக்குரிய வேலையைச் செய்யாமல் நீங்கள் இருக்கும் போது உங்கள் மீது எரிச்சல் அடைய மற்றவர்களுக்கு எல்லா உரிமையும் உண்டு

*தொகுப்பு – இ.மு.ஷிமி சம்யுக்தா*

*நுண்ணுயிரியல் முதலாமாண்டு*

# அம்மா..!

முன் ஜென்மத்தில் என்ன பாவம் செய்தேனோ

முதன்முதலில் பிறக்கும் பொழுது

உன்னைப் பார்க்காமல்

பிரசவம் பார்த்த

மருத்துவரைப் பார்த்துவிட்டேன்..!



*பா.சிந்துஜா*

*நுண்ணுயிரியல் முதலாமாண்டு*

## மனிதன் மனிதனாக வாழ 18 அம்சங்கள்

மிகவும் மதிக்கப்பட வேண்டியவர்கள் – தாய், தந்தை

மிக மிக நல்ல நாள் – இன்று

மிகப் பெரிய வெகுமதி – மன்னிப்பு

மிகவும் வேண்டியது – பணிவு

மிகவும் வேண்டாதது – வெறுப்பு

மிகப் பெரிய தேவை – நம்பிக்கை

மிகக் கொடிய நோய் – பேராசை

மிகவும் சுலபமானது – குற்றம் காணல்

கீழ்த்தரமான விஷயம் – பொறாமை

நம்பக்கூடாதது – வதந்தி

ஆபத்தை விளைவிப்பது – அதிக பேச்சு

செய்யக்கூடாதது – நம்பிக்கைத் துரோகம்

செய்யக்கூடியது – உதவி

விலக்க வேண்டியது – சோம்பேறித்தனம்

உயர்வுக்கு வழி – உழைப்பு



நழுவவிடக் கூடாதது – வாய்ப்பு

பிரியக்கூடாதது – நட்பு

மறக்கக்கூடாதது – நன்றி

*தொகுப்பு – ரா.சுரேந்தர்*

*நுண்ணுயிரியல் முதலாமாண்டு*

**எழுத்தாணி - 6**

# நானும் வருகிறேன்..

பழங்காலத்தில் கணவன் மனைவி இருவரும் உன்னதமான இல்லற வாழ்க்கையை நடத்தியுள்ளனர் என்பதற்குப் பல சான்றுப் பாடல்களைச் சங்க இலக்கியங்களிலிருந்து எடுத்துக்காட்டலாம். இருப்பினும் காலத்தால் தனித்து நிற்கக் கூடிய பாடல்கள் சில இருக்கின்றன. அவற்றுள் ஒன்று கலித்தொகையின் பாலைக்கலியில் உள்ள மரையா மரல்கவர எனத் துவங்கும் ஐந்தாவது பாடல்.

இன்றைய காலக்கட்டத்தில் திருமணம் ஆன இரண்டொரு மாதங்களில் கட்டிய மனைவியை விட்டுவிட்டு சம்பாதிக்கும்

பொருட்டு வெளிநாடு செல்கின்ற பழக்கத்தினைப் பெரும்பாலான ஊர்களில் காணமுடிகிறது. இக்காட்சி பழங்காலத்திலும் நிகழ்ந்தேறியிருக்கிறது. ஆம் தலைவன் தன் தலைவியைவிட்டுப் பொருள் தேடிச் செல்லும் சூழலைப் பொருள்வயிற் பிரிவு என்று குறிப்பிடுவர். அப்படி ஒருநாள்,

விடுமுறை முடிந்து, பொருள் தேடும் பொருட்டுப் பயணத்திற்குத் தேவையான பொருள்களை எடுத்து வைத்துக் கொண்டிருக்கிறான். பரபரப்பாகவும் அதேசமயம் தலைவியைப் பிரிகிறோம் என்கிற வருத்தத்தோடும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறான். தலைவனின் இத்தகைய செயல்பாட்டினைக் குறிப்பால் உணர்ந்து கொண்ட தலைவி,

எங்கே புறப்படுகிறீர்கள்? என்று கேட்கவில்லை. மாறாக என்னையும் கூடவே கூட்டிச் செல்லுமாறு வேண்டுகிறாள். காரணம் தலைவன் தன்னைவிட்டுப் பிரிகின்றான் என்பது அவளுக்குத் தெரியும். பிரிவை விரும்பாத தலைவி இவ்வாறு கூறிவிடுகிறாள். தலைவியின் அறிவுத்திறத்தைக் கண்ட தலைவன், தலைவிக்கு எடுத்துரைக்கிறான். தான் செல்லும் வழி அவ்வளவு எளிதானது அல்ல. கொடுமையானது. நீ வருவது தகாது. உன்னால் அதைத் தாங்கிக்கொள்ள முடியாது என்று எடுத்துரைக்கிறான். இதைக் கேட்டதும் தலைவி மறுமொழி பேசுகிறாள். தலைவனின் பயணக்குறிப்பை அறிந்து கொண்ட தலைவி தலைவனுக்கு எடுத்துரைத்தது.

**கவிதை வடிவம்**

வறட்சியின் கோரத்தால்
புல்லைத் திண்ணும் காட்டுப்பசு

அன்று கற்றாழையைக்
கடித்துக் கொண்டிருந்தது
மழை பொழியாத காரணத்தால்
வறட்சி தாண்டவமாடியது..
உயர்ந்து ஓங்கிய மலைகள்
கடத்தற்கு அரிய காடு..
என்று வளமையின் அடையாளம்
கண்ணுக்கெட்டிய தூரம்
தென்படவில்லை வறட்சி.. வறட்சி..



இந்தக் கொடுமையான காட்டைக் கடந்தால்தான்
உயிருக்கு உத்திரவாதம்..
ஆனால் ஆறலைக் கள்வர்கள்
அம்பினை இழுத்துப் பிடித்து விடும்
விசையால் உடலில் அம்பு முழுதும் புகுந்து
தீராவலியை இமைப்பொழுதில் தந்திடும்
வலியால் தண்ணீர் தண்ணீர்
என்று நாக்கு தவிக்க
தண்ணீர் கிடைக்காமல் அருந்துயர் அடைந்திட
தனது கண்ணீரே தண்ணீராய்
நாக்கை நனைக்கின்ற
அவலக் காட்சிகள் நிறைந்த
கொடுமையான காடு என்று தலைவன் உரைக்கிறான்..
மனம் பொறாத தலைவியோ
என்னைப் புரிந்தது இவ்வளவுதானா தலைவா?
இது உனது மாட்சிமைப் பண்புக்கு அழகா?

நீ இப்படி செய்தால் அன்பு எனும் அறம்
என்னைச் சூழும் என்று நினைத்தாயோ?
நீ கூறும் கொடுமையான காட்டிலே
நீ மட்டும் துன்பம் அடைவதை
என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது
உனது துன்பத்தில் பங்கு பெறுவதே
நல்ல மனையாளின் கடன்
உன்னுடன் துன்பம் பெறுவதே
எனக்குப் பேரின்பம்
ஆகவே என்னையும் அழைத்துச் செல்..!



என்று தலைவி உணர்வு மேலிட்டுத் தலைவனிடம் தனது ஆற்றாமையையும் அன்பையும் வெளிப்படுத்துகின்றாள். இதோ அந்தப் பாடலடிகள்

**செய்யுள் – பாலைக்கலி(05)**

மரையா மரல்கவர மாரி வறப்ப
வரையோங்கு அருஞ்சுரத்து ஆரிடைச் செல்வோர்
சுரையம்பு மூழ்கச் சுருங்கிப் புரையோர்தம்
உள்நீர் வறப்பப் புலர்வாடும் நாவிற்குத்
தண்ணீர் பெறாஅத் தடுமாற்றத்து அருந்துயரம்
கண்ணீர் நனைக்கும் கடுமையது காடு என்றால்
என்நீர் அறியாதீர்போல இவைகூறின்
நின்நீர அல்ல நெடுந்தகாய் எம்மையும்
அன்பு அறச்சூழாதே ஆற்றிடை நும்மொடு
துன்பம் துணையாக நாடின் அதுவல்லது
இன்பமும் உண்டோ எமக்கு

**உரைவடிவம்**

மழை இன்மையால் காட்டுப்பசு கற்றாழையை உண்ண, உயர்ந்த மலைகளும் கடத்தற்கு அரிய காடுகளும் நிறைந்த வழியிடத்தே மக்கள் செல்ல, ஆறலைக்கள்வர்கள் தங்களது சுரையம்பு உடலில் மூழ்கும்படியாக விசையுடன் செலுத்தி வழிப்பறி செய்வர். கொலையுண்டதால் உடலில் ரத்தமின்றி வாடுகின்ற நாவிற்குத் தண்ணீரை நாட தண்ணீர் பெறாமல் தடுமாறுகின்ற அவலநிலையில் தங்களது கண்ணீரே நாவினை நனைக்கிறது இத்தகு கொடுமைமிகுந்த காடு என்று நீர் கூறினால் மாட்சிமை பொருந்திய தலைவனே அது நினக்குப் பொருந்தாது. என்னை அறியாது அவ்வாறு கூறுகின்றாய். இதனால் அன்பு எனும் அறம் என்னைச் சூழாது. ஆற்றிடை வழியே துன்பம் நேரின் உனக்குத் துணையாக வருவதையே விரும்புகின்றேன். அதுவன்றி வேறு இன்பம் எனக்கு உண்டோ?

**பெறக்கூடிய கருத்து**

பொருள்வயிற் பிரிவில் அல்லது போர்வயிற் பிரிவில் தலைவியை உடன் அழைத்துச் செல்லுதல் தமிழர் மரபு அன்று என்று தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. இருந்தாலும் தலைவி இவ்வாறு உரைத்திருப்பது பெண்ணியக் குரலாகத் தென்படுகிறது. மரபை மீறி அறிவுப்பூர்வமான சமூகக் கட்டமைப்பைக் காணமுடிகிறது.

**அருஞ்சொற்பொருள்**

மரையா – காட்டுப்பசு, மரல் – கற்றாழை, வரை – மலை, சுரம் – காடு, ஆரிடை – கடத்தற்கு அரிய வழி, புரையோர் – ஆறலைக்கள்வர்கள்

அகரன்

# ஜவஹர்லால் நேரு

இந்திய சுதந்திர போராட்டத்தின் முன்னணி தலைவர்களில் ஒருவரான ஜவகர்லால் நேரு, சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமராக இந்தியாவை வழிநடத்தியவர் ஆவார். அணி சேரா இயக்கத்தை உருவாக்கியவரில் ஒருவராகவும், சுதந்திரப்போராட்ட வீரராகவும், இந்தியா முழுவதும் குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் நலன், கல்வி முன்னேற்றம் குறித்துப் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றியவரும், "நவீன இந்தியாவின் சிற்பி" எனவும்



கருதப்படும் ஜவகர்லால் நேருவின் வாழ்க்கை வரலாறு மற்றும் சாதனைகளைப் பற்றி விரிவாக காண்போம்.

பிறப்பு: நவம்பர் 14, 1889

இடம்: அலகாபாத், உத்திரப் பிரதேசம் (இந்தியா)

பணி: சுதந்திர போராட்ட வீரர், அரசியல் தலைவர்

இறப்பு: மே 27, 1964

நாட்டுரிமை: இந்தியா

**பிறப்பு**

ஜவகர்லால் நேரு அவர்கள், இந்தியாவின் உத்திரப்பிரதேசம் மாநிலத்தில் அமைந்துள்ள அலகாபாத் மாவட்டத்தில் பெரிய செல்வந்தரும், வழக்கறிஞருமான மோதிலால் நேருவுக்கும், சுவரூப

ராணி அம்மையாருக்கும் மூத்த மகனாக ஒரு பிராமண குடும்பத்தில் பிறந்தார். நேருவுக்கு, விஜயலட்சுமி பண்டிட் மற்றும் கிருஷ்ணா என்ற இரு சகோதரிகள் இருந்தனர்.

**ஆரம்ப வாழ்க்கை மற்றும் கல்வி**


இங்கிலாந்திலுள்ள ஹர்ரோவில் தனது பள்ளிப்படிப்பை தொடங்கிய நேரு அவர்கள், ட்ரினிட்டி கல்லூரியில் இயற்கை அறிவியல் படித்து 1910ல் "திரைபோசில்" இரண்டாவது மாணவனாகப் பட்டம் பெற்றார். கேம்ப்ரிட்ஜ் மற்றும் ட்ரினிட்டி கல்லூரியில் சட்டப்படிப்பை முடித்த அவர், 1912ல் இன்னர் டெம்பிலில் சட்டம் பயில பதிவு செய்துக்கொண்டார். 1962 ல், வெற்றிகரமாக சட்டப் படிப்பை முடித்த நேரு தனது சட்டப் பணியைத் தொடங்க இந்தியா திரும்பினார்.

**திருமண வாழ்க்கை**

நேரு அவர்கள், 1916 ல் கமலா கவுல் என்ற பிராமணப் பெண்ணைத் திருமணம் செய்துகொண்டார். திருமணத்திற்குப் பிறகு, கமலா நேருவும் சுதந்திர இயக்கத்தில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார். திருமணம் ஆன அடுத்த ஆண்டில் இந்திராபிரியதர்ஷினி என்ற மகள் பிறந்தாள் (பின்னாளில் பெரோசு காந்தியை திருமணம் செய்துகொண்ட அவர், 'இந்திரா காந்தி' என்றழைக்கபட்டார்). இருபது ஆண்டுகாலம் நேருவுடன் வாழ்ந்த கமலா நேரு, 1936ல் புற்று நோயால் இறந்துப்போனார். கமலா நேருவின் இறப்பிற்குப் பிறகு, கடைசிவரை தனியாகவே வாழ்ந்தார்.

## நேருவின் படைப்புகள்

வாழ்நாளில் ஒன்பது வருடங்கள் சிறையில் கழித்த நேரு அவர்கள், சிறையில் இருந்த நாட்களில் ஒரு சில நூல்களை எழுதினார்.



1934 ல் ''உலக வரலாற்றின் காட்சிகள்"

1936 ல் ''சுயசரிதை"

"இந்தியாவின் கண்டுபிடிப்பு"

இந்தப் படைப்புகள், ஒரு எழுத்தாளராக அவருக்குப் பெருமை சேர்த்தது மட்டுமல்லாமல், நற்பெயரையும் தேடித்தந்தது.

## இந்தியாவின் முதல் பிரதம மந்திரியாக நேருவின் பணிகள்

இந்திய சுதந்திர இயக்கத்தின் முன்னோடியாக கருதப்படும் நேரு அவர்கள், ஆகஸ்ட் 15, 1947 முதல் மே 27, 1964, அதாவது தனது இறுதிக் காலம் வரைப் பிரதமராக பணியாற்றினார். அவரது ஆட்சியில், இந்தியாவின் வளர்ச்சிக்குப் பல திட்டங்களைத் தீட்டி, நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டு சென்றார் என்றால் அது மிகையாகாது. 1951ல், இந்திய திட்டக் குழுவை உருவாக்கி, சுதந்திர இந்தியாவின் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தை வரைந்தார். பின்னர், 1952 ல் நடந்த தேர்தலில், நேருவின் தலைமையில் காங்கிரஸ் பெரும் வெற்றிப் பெற்றது. முதல் ஐந்தாண்டுத் திட்டம், அரசாங்கத்தின் தொழிற்சாலைகளின் முதலீடு மற்றும் விவசாயத்தை வரையறுத்தது. மேலும் தொழிற்சாலைகளை அதிகப்படுத்துதல், வருமான வரிகள் மூலம் கலப்புப் பொருளாதாரத்தை உருவாக்கி சுரங்கம், மின்சாரம் மற்றும் கனரக இயந்திரங்கள் தொழிற்சாலைகள், தனியாரிடம் போவதை தடுத்து, அரசாங்கமே நடத்தத் திட்டம்

வகுத்தார். நில மற்றும் பங்கீட்டை முதன்மைப் படுத்தினார். விவசாயக் கிணறுகள், அணைகள் கட்டுதல், விவசாய உற்பத்தியைப் பெருக்க உரங்கள் உபயோகிக்கும் முறையை செயல்படுத்தியது மட்டுமல்லாமல், அணு ஆற்றலில் இந்தியா சிறந்து விளங்கவும் திட்டங்களைத் தீட்டினார்.

'இந்தியாவின் எதிர்கால முன்னேற்றம், குழந்தைகள் மற்றும் இளைஞர்களின் கல்வியை மேம்படுத்துவதில் தான் இருக்கிறது' என்பதை நன்கு உணர்ந்த நேரு அவர்கள், அனைத்திந்திய மருத்துவ அறிவியல் கழகம், இந்திய தொழில்நுட்பக் கழகங்கள், இந்திய மேலாண்மைக் கழகங்கள், தேசிய தொழில்நுட்பக் கழகங்கள் போன்ற அரசாங்க உயர் கல்வி நிறுவனங்களை ஏற்படுத்தி கவனித்து வந்தார். இலவச கட்டாய கல்வித் திட்டத்தை செயல்படுத்தி ஆயிரக்கணக்கான பள்ளிகளைக் கட்டினார். சிறந்த கிராமப்புறத் திட்டங்களை ஏற்படுத்தி, பள்ளிகளில் இலவச சத்துணவு திட்டத்தையும் அமல்படுத்தினார். தாழ்த்தப்பட்டோர் மற்றும் பிற்படுத்தப்பட்டோருக்கு, அரசுப்பணிகள் மற்றும் கல்வி நிறுவனங்களில் இடஒதுக்கீட்டினை ஏற்படுத்தினார்.



**நேருவின் வெளிநாட்டுக் கொள்கைகள்**

நேரு அவர்கள், பல பிரச்சனைகளைத் திறம்பட சமாளித்து தீர்த்ததால், உலக பார்வையில், 'சமாதானபடுத்துவதில் மன்னர்' என்றும் ஐக்கிய நாடுகளின் வலுவான ஆதரவாளராகவும் போற்றப்பட்டார். "கூட்டுசேராக் கொள்கைகள்" மற்றும் "அணிசேரா

இயக்கங்களை" உறவாக்கி, அமெரிக்கா, ரஷ்யா போன்ற நாடுகளுடன் நடுநிலைமை வகித்தார். மனித சமுதாயத்திற்கு அணுஆயுதங்கள் உண்டாக்கும் விளைவுகளை நன்கு அறிந்ததாலும், அவை நாட்டின் வளர்ச்சிக்குத் தடையாக இருக்கும் என கருதி அணுஆயுதக் கொள்கையை நேரு அவர்கள் ஆதரிக்கவில்லை என கூறப்படுகிறது. 1954 ல், நடைபெற்ற திபெத்தின் மீதான சீன-இந்திய உடன்படிக்கை, பஞ்சசீலக் கொள்கைகளின் அடிப்படையாக இருந்தாலும், பல காரணங்களால் சீன இந்திய உறவு இன்றளவும் பிளவுப் பட்டுத்தான் காணப்படுகிறது. இருந்தாலும், மிக சக்திவாய்ந்த வெளியுறவுக் கொள்கைகளால் நவீன இந்திய அரசாங்கத்தை, அரசியல் காட்சாரத்தை வடிவமைப்பதில் முக்கிய பங்கு வகித்தார்.



**நேருவின் பெயரை பறைச்சாற்றும் நினைவுச்சின்னங்கள்**

இந்தியா முழுவதும் கல்விநிலையங்கள், விளையாட்டு அரங்கங்கள், தெருக்கள், சாலைகள் மற்றும் பல பொது நிறுவனங்களுக்கு நேருவின் பெயர் சூட்டப்பட்டு அவருடைய நினைவைப் பறைசாற்றுகின்றன.

1989 ஆம் ஆண்டு, சோவியத் ஒன்றியத்தால் நேருவின் தபால் தலை வெளியிடப்பட்டது.

மும்பையில் உள்ள ஒரு துறைமுகத்திற்கு 'நேரு துறைமுகம்' என பெயர் சூட்டப்பட்டுள்ளது.

நேரு பிரதமாராக இருந்தபோது, அவர் வசித்து வந்த "தீன் மூர்த்தி பவன்", தற்போது அவர் நினைவாக அருங்காட்சியகமாக

மாற்றப்பட்டு, இன்றளவும் இந்திய அரசால் பராமரிக்கப்பட்டு வருகிறது.


லண்டனில் உள்ள ஆல்ட்விச்சில் நேருவுக்கு சிலை எழுப்பப்பட்டுள்ளது.

நேரு அவர்கள், வாழ்நாள் முழுவதும் குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் நலன், கல்வி மற்றும் அக்கறையுடன் பாடுபட்டதை நினைவூட்டும் வகையில் அவரின் பிறந்த நாளான, நவம்பர் 14ஐ இந்தியா முழுவதும் "குழந்தைகள் தினமாகக்" கொண்டாடுகிறோம்.


## இறப்பு

1964 ஆம் ஆண்டு, மே மாதம் 27 ஆம் தேதி நேரு அவர்கள், மாரடைப்பால் மரணம் அடைந்தார். அவருடைய உடல், யமுனை நதிக்கரையில் உள்ள சாந்திவனத்தில் தகனம் செய்யப்பட்டது. ஒரு சுதந்திரமான, சமத்துவமான ஜனநாயக நாட்டை உருவாக்க வேண்டும் என்ற நேருவின் கனவுதான் இந்தியாவிற்கு வலுவான அடித்தளத்தை அமைத்துக் கொடுத்தது என்றால் அது மிகையாகாது. குழந்தைகள் தின நல்வாழ்த்துகள்.

நன்றி - http://kalvithedal.blogspot.in/2013/11/blog-post_3781.html





I. B.COM CA 'B'


K.Kavin Kumar
I- BSc Micro
biology






C. Priyadharshini
I- B.Com (CA) -'B'

